# செப்டம்பர் 6 - புனித எலுதேரியுஸ் (-585)

இவர் இத்தாலியா நாட்டின் ஸ்பொலெத்தோ நகருக்கு அருகில் இருந்த ஒரு சந்நியாச மடத்தில் தலைவராக இருந்தார். புதுமைகள் செய்யும் வரத்தை கடவுள் இவருக்கு அளித்திருந்தார். பாப்பு ஆக இருந்த புனித கிரகோரியார் இவரது காலத்தில் வாழ்ந்தார். கிரகோரியார் உடல் நலம் குன்றியவர். இயேசு உயிர்த்த விழாவுக்கு முந்தின நாள் ஒரு சந்தி பிடிக்க அந்தக் காலத்தில் கடமையிருந்தது. கிரகோரியரால் ஒரு சந்தி பிடிக்க முடியவில்லை. எனவே அவர் நம் புனிதரை அழைத்து தமக்கு உடல்நலம் கிடைக்கும்படி அவர் தம்மோடு புனித பிலவேந்திரரது ஆலயத்திற்குப் போய் மன்றாடும்படி அவரைக் கூட்டிச் சென்றார். புனித மடாதிபதியின் மன்றாட்டுகளுக்கு கடவுள் இரங்கி கிரகோரியாருக்கு உடல்நலம் கிடைத்தது. ஏனைய விசுவாசிகளுடன் சேர்ந்து ஒரு சந்தி பிடித்தார். இவர் தமது பதவியை விட்டு விலகி உரோமையிலிருந்த புனித பிலவேந்திரரது மடத்திற்குச் சென்று 585-ஆம் ஆண்டையொட்டி இறந்தார்.




**சிந்தனை:** புனிதர்களின் மன்றாட்டு கடவுளிடம் வல்லமையுள்ளது: மோட்சத்திலிருக்கும் புனிதர்களைப் பயன்படுத்தி நமக்குத் தேவையானவைகளைப் பெறுவோம்.

**செபம்:** இறைவனின் சகல புனிதர்களே, திருச்சபைக்காகவும் உலகத்திற்காகவும் இயேசுவை மன்றாடுங்கள்.